

மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொகுதிக்குட்பட்ட ஆனையூர் பகுதியில் திரண்டிருந்த பெண்கள், பொது மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், பகுதி செயலாளர்கள் மருதுபாண்டியன், சசிகுமார், முன்னாள் ஒன்றிய சேர்மன் வீரராகவன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் கலை கார்த்திகேயன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உமாசிங்கத்தேவன், மாவட்ட துணைச் செயலாளர் ரோகிணி பொம்மதேவன், மாமன்ற உறுப்பினர்கள் செல்வகணபதி, பாபு, நந்தினி வட்டச் செயலாளர் முருகேசன் தகவல் தொழில்நுட்ப அணி கவிதா உள்ளிட்ட திரளான தி.மு.க. நிர்வாகிகள், தி.மு.க.வினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

### பாளை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர்

# மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. வண்ணாரப்பேட்டையில் பிரச்சாரம்!

## பெண்கள் கழக அரசு சாதனை பதாகை ஏந்தி தெருத் தெருவாக வாக்குச் சேகரிப்பு!

நெல்லை.ஏப்.10

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. வண்ணார் பேட்டை 11வது வார்டு வெற்றி வெற்றி வேலடி விநாயகர் கோவில் முன்பிருந்து பிரச்சாரத்தை துவங்கும் போது தமிழ்நாட்டில் 1.31 கோடி மகளிருக்கு கலைஞர் உரிமைத் தொகையாக ரூபாய் 1000,ம் வழங்கிய உதயசூரியனுக்கு வாக்களியுங்கள் என்றும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் 2.0 ஆட்சி மீண்டும் அமையும் என்று கூறி தனது பிரச்சாரத்தை துவக்கினார்.

மேலும் பெண்கள் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கழக அரசின் சாதனைகள் விளக்கும் பதாகைகளை கையில் ஏந்திய படி வாக்கு சேகரித்தனர்.

பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. நேற்று முன்தினம் (8ம் தேதி) பாளை தொகுதிக்கு உட்பட்ட வண்ணாரப்பேட்டை 11 வது வார்டு வெற்றி வேலடி விநாயகர் கோவில் முன்பிருந்து தனது தேர்தல் பிரச்சாரத்தை துவக்கினார்.

தொடர்ந்து 10,9 ஆகிய வார்டு பகுதியில் தெருத் தெருவாக சென்று கழக அரசின் ஐந்தாண்டு சாதனைகளை எடுத்துக் கூறியும், திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் தேர்தல் அறிக்கை பற்றியும் எடுத்துக் கூறியும் பேசுகையில் தமிழ்நாட்டில் 1.31 கோடி மகளிர்க்கு மாதம்தோறும் ரூபாய் 1000,ம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். தேர்தலை காரணம் காட்டி இந்த திட்டத்தை நிறுத்த அ.தி.மு.க, பா.ஜ.க கூட்டணி சதித்திட்டம் தீட்டியது. அதனை அறிந்த கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் ஒரே நாளில் 5000,ம் ரூபாய் 1.31 கோடி பெண்களின் வங்கி கணக்கில் வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

சட்டமன்றத் தேர்தல் முடிந்து முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமையும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மகளிர் உரிமைத்தகை ரூபாய் 2000 ஆக உயரும். இதுதான் திராவிட மாடல் ஆட்சி. அதற்கு அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பாளை தொகுதியில் அதிக வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று பேசினார்.

நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் முருகன் மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர், மேயர் ராமகிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.வி சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், மாநகர துணை செயலாளர்கள் பிரபு பாண்டியன், சுதாமூர்த்தி, பூக்கடை அண்ணாதுரை,

பகுதி பொறுப்பாளர்கள் பச்சை சுப்பிரமணியன் டாக்டர் சங்கர் சையது முகைதீன் அண்டன் செல்லதுரை துபாய் சாவில் சாமுவேல் மண்டலக்குழு தலைவர்கள் மகேஸ்வரி ரேவதி பிரபு பிரான்சிஸ் மாமன்ற உறுப்பினர்கள் கந்தன், சகாய ஜூலியட் மேரி, ராஜேஸ்வரி, ரம்ஜான் அலி, அலிசேக் மன்சூர், மாரியப்பன், சபி அமீர் பாத், கோகுல வாணி சுரேஷ், மன்சூர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசி மணி உள்பட கழகத்தினர் கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பெண்கள் கழக அரசின் சாதனை திட்டங்கள் குறித்த பதாகைகளை வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கையில் ஏந்திய படி தெருத் தெருவாக சென்று வாக்கு சேகரித்தனர்.

நேற்று 09.4.2026 பாளை தொகுதிக்கு உட்பட்ட 36,4,8 ஆகிய வார்டு பகுதிகளில் வேட்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ தீவிர வாக்கு சேர்ப்பு பணியில் ஈடுபட்டார்.

### குலையநேரி கிளைச் செயலாளர் மாடசாமி ஏற்பாடு! தென்காசி கழக வேட்பாளர் கலை கதிரவனுக்கு ஆதரவு!

# தென்காசி குலையநேரி அ.தி.மு.க. பா.ஜ.க. நிர்வாகிகள் 25 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை முன்னிலை! பொ.சிவபத்மநாதன் பங்கேற்பு!

தென்காசி.ஏப்.10-

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் நல்லாட்சி மீண்டும் தொடர தென்காசி தெற்கு மாவட்டம் குலையநேரி ஊராட்சி கிளைச் செயலாளர் மாடசாமி ஏற்பாட்டில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை முன்னிலையில் தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவனை ஆதரித்து அ.தி.மு.க. பா.ஜ.க. நிர்வாகிகள் 25 க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்றார்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் ஐந்தாண்டு காலம் சிறப்பாக நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியில் எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் அனைத்து திட்டங்களும் கிடைக்க பெற்று தமிழக மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் கவலைகளை மறந்து நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். தற்போது திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் தி.மு.க. தேர்தல் அறிக்கைசூப்பர் ஸ்டார் அறிக்கையாக அமைந்துள்ளது. இதனை தெரிந்து கொண்டு மாற்றுக்கட்சியினர் தொடர்ந்து கழகத்தில் தங்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நடந்து வருகிறது.

அதன்படி தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குலையநேரி ஊராட்சி கிளைச் செயலாளர் மாடசாமி ஏற்பாட்டில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை முன்னிலையில் தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவனுக்கு ஆதரவு தெரிவிக்கும் அடிப்படையில் குலையநேரி ஊராட்சி இரட்டைக்குளம் நாட்டாமை முருகன் தலைமையில் ஊராட்சி உறுப்பினர்கள் மனோகரன், ராஜ் என்ற யோகநாதன், குமார், ஆறுமுகம், தேவேந்திரன், சமுத்திரம், வைரசாமி, ராமராஜ், செல்வம், கணேசன், பிரசாத், தேவா, ராமச்சந்திரன், மயில் முருகன், ராமச்சந்திரன், வேலாயுதம் உள்பட 25 க்கும் மேற்பட்ட அ.தி.மு.க., பா.ஜ.க.வினர் அக்கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவ பத்மநாதன், ஆனைகுளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலீல், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் திருமலை குமார், சுப்பையாபுரம் திருமலைக்கனி, ஒன்றிய கவுன்சிலர் சங்கர், மாவட்ட பிரதிநிதி துரைப் பாண்டியன், மேலநீலிதநல்லூர் முன்னாள் வட்டார காங்கிரஸ் தலைவர் மாணிக்கம், ஹரிச்சந்திரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஹரி கிருஷ்ணன், அசோக் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை குலையநேரி கிளை செயலாளர் மாடசாமி செய்திருந்தார்.

### கழகத் துணைப் பொதுச் செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி.



## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விபரங்கள் (விருதுநகர்)

**10.04.2026 (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | இடம் |
|---|---|
| 06:00 PM | **திருச்சுழி தொகுதி -** திருச்சுழி (காரியாபட்டி நரிக்குடி, அருப்புக்கோட்டை சாலை சந்திப்பு) |
| 07:00 PM | **அருப்புக்கோட்டை தொகுதி -** மதுரை சாலை ( சிவன் கோவில் அருகில்) |
| 08:00 PM | **விருதுநகர் தொகுதி -** ரோசல்பட்டி (தேவர் சிலை அருகில்) |
| 09,00 PM | **சிவகாசி தொகுதி -** பேருந்து நிலையம் அருகில் |



நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மு.அப்துல்வஹாப் பாளை தொகுதிக்கு உட்பட்ட11 வது வார்டு வண்ணார்பேட்டை வெற்றி வேலடி விநாயகர் கோவில் முன்பிருந்து தனது தேர்தல் பிரச்சார வாக்கு சேகரிக்கும் பணியை துவக்கினார். தொடர்ந்து அவர் 10,9 ஆகிய வார்டு பகுதிகளில் தெருத் தெருவாக சென்று கழக அரசின் 5 ஆண்டு சாதனைகளை எடுத்துக் கூறி தீவிர வாக்கு சேர்க்கும் பணியில் ஈடுபட்டார். உடன் மாவட்ட அவைத்தலைவர் முருகன், பொருளாளர் வண்ணை சேகர், மேயர் ராமகிருஷ்ணன், துணைச் செயலாளர் கள் சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகேஸ்வரி, பகுதி பொறுப்பாளர் தச்சை சுப்பிரமணியன் உள்பட கழகத்தினர் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



### சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் – 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் - காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் எம்.பி., தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|
| 14.04.2026 | ஈரோடு தெற்கு | ஈரோடு மேற்கு |
| | ஈரோடு மத்திய | பெருந்துறை |
| | கோவை வடக்கு | மேட்டுப்பாளையம் |
| | கோவை மாநகர் | கோவை வடக்கு |
| | கோவை தெற்கு | சூலூர் |
| 15.04.2026 | மதுரை மாநகர் | மதுரை வடக்கு |
| | | மதுரை மத்திய |
| | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் |
| | | திருமங்கலம் |
| | மதுரை வடக்கு | மதுரை மேற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# காலடியார்!




துரோகங்களால்
தோரணம் கட்டி

அரை
நூற்றாண்டு
கால
அண்ணா தி.மு.க.வுக்கு

கல்லறை
கட்டி வரும்
கலிகால
அரசியலின்

"துரோகமேச்
சாரியார்"

சேலம் கண்ணன்
தொடங்கி

செங்கோட்டையன்

சசிகலா

ஓபிஎஸ் என

கூர் தீட்டிய
கரங்கள்
மொத்தத்தையும்

பதம் பார்த்த
கோடாரி...

உள்ளே வந்து
உலை
வைக்கலாம்
என

கனா காணும்
ஸ்லீப்பர் செல்
டிடிவியை

உள்ளே
வரவைத்து

மொத்தமாய்
முடிக்க
முன்னேற்பாடு
நடத்தும்
முதுகு குத்துத்
திலகம்...
மேடைகளில்
தேடும்
அரசியலை

மேஜைக்கு
கீழே
கண்டெடுத்த

கூவத்தூர்
குத்தகைத்
தலைவன்...

கொடநாடு
முதல்

கோட்டை வரை
தூரு வாரிய
பெருந்த(தொ)கை...

எட்டுத் தொகை
பத்துப்பாட்டு
என்னும்
சங்கத்தமிழை

எட்டுத்தோல்வி
பத்துத் தோல்வி
என்பதாக்க

கஜினிக்கு
போட்டியாக
காலம் நிறுத்திய பழனி...

கம்பராமாயணம்
எழுதியது
சேக்கிழார் என்பதை

துப்புத்துலக்கிய
சிலுவம்
பாளையத்து
சின்னக்கம்பர்..

தோல்வி கண்டு
துவளவும்
மாட்டார்

தோல்வியில்
இருந்து
மீளவும் மாட்டார்..

எடுத்த காரியத்தை
முடிக்காமல்
ஓயவும் மாட்டார்

அந்த வகையில்

2026 ஏப்ரல்
23ம் நாளில்

அவர் எடுத்த
காரியத்தை
முடித்து

கட்சிக்கே
"காரியம்" செய்ய
காத்திருக்கும்
மாவீரர் மடப்பாடி...

எம்.ஜி.ஆர்.
முகவுரை
எழுதியதிற்கு

அம்மா
தொடர்வுரை
எழுதியதற்கு

முடிவுரை
எழுதும்
யோகக்காரர்
எடப்பாடி..

என்ன செய்வது..

ஒரு ஜல்லி உடைக்கும்
எந்திரத்தை

சிற்பி என
நம்பியதால்
வந்த வினை...

கதம் கதம்...

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் பெ.கீதாஜீவன் வெற்றி சின்னமாம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரிய சாமி, காங்கிரஸ் கமிட்டி துணை தலைவர் ஏ.பி.சி.வி. சண்முகம், மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், கூட்டணி கட்சி தலைவர்கள், கழக உடன்பிறப்புகள் மற்றும் மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.